Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.397/2021

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முனியசாமி | Occupation | உதவி மின்பொறியாளர் |
| Father's name | கோவிந்தசாமி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of September 2025.

01.09.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் உதவி மின்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.03.2014 அன்று எனது உதவியாளரான அழகுமலை என்பவர் என்னை காலை சுமார் 07.00 மணியளவில் தொலைபேசி மூலம் என்னை அழைத்து 06.03.2014 அன்று இரவு அத்திதொண்டு அருகே ஒரு யானை மின்சாரம் பாய்ந்து இறந்துகிடப்பதாக என்னிடம் கூறினார். நான் எனது உயர் அதிகாரிகளுக்கு தகவலை தெரிவித்துவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். அந்த இடத்தில் வனச்சரகரும் மேற்படி இடத்தின் கிராம நிர்வாக அலுவலரும் இருந்தனர். அதன் பின் எனது உயர் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டனர். நாங்கள் அனைவரும் சேர்ந்து யானை இறந்துகிடந்த இடத்தை ஆய்வு செய்தபோது அந்த இடத்தில் குச்சி ஊண்டி 2 அடுக்கு கம்பி வேலி அமைத்து வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் சென்ற சமயம் அதில் மின்சாரம் எதுவும் பாயவில்லை. ஆனால் மேற்படி கம்பி வேலியில் மின்சாரம் பாய்ச்சுவதற்கான உபகரணங்கள் அதன் அருகே உள்ள பம்பு செட்டில் வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்பு மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் அந்த இடமானது வெளியூரை சேர்ந்த

பழனிவேல் என்பவருக்கு சொந்தமானது என்றும், அந்த சமயத்தில் கணபதியப்பன் என்பவர் அந்த இடத்தினை குத்தகைக்கு எடுத்து கவனித்து வருவதும் தெரியவந்தது. அதன் பின் மேற்படி மின்சார கம்பி வேலி அமைத்த நபர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து எங்களுக்கு மின்சார இழப்பீட்டு தொகை பெற்றுத்தருமாறு கோரி காவல்நிலையத்தில் புகார் ஒன்றை கொடுத்தேன். அதன் பின்பு 01.04.2014 அன்று மேற்படி பழனிவேல் சார்பாக ஒரு நபர் எங்களுக்கு இழப்பீட்டு தொகையான ரூ.19,484/– செலுத்தினார். ஆஜர் எதிரிகள் மம்சாபுரத்தை சேர்ந்தவர்கள் என்பது எனக்கு தெரியும். ஆனால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.